Dt Next, Dated: 13.06.2024

# 'IAF played vital role in 2024 LS polls'

**NEW DELHI: From extending the reach of the Election Commission into remote corners of the country to airlifting EVMs, the IAF played a vital role in the recently-held general elections, with its aircraft flying more than 1,000 hours in over 1,750 sorties.**

The Indian Air Force on Wednesday shared details about the helping hand it lent to the electoral machinery in the conduct of the Lok Sabha polls.

"During the general elections 2024, the substantial flying effort has taken place over the last few months by medium-lift helicopters (Mi-17 variants), light utility helicopters (Chetak) and the indigenously manufactured advanced light helicopters (ALH Dhruv)," the IAF said in a statement.



**An IAF helicopter transports polling parties during 2024 General Elections in New Delhi**

The force has been actively involved with the task of airlifting electronic voting machines (EVMs) and deploying Election Commission of India (ECI) personnel on election duties, as has been carried out during previous general or assembly elections, officials said.

During the general elections 2024, the IAF played a "pivotal role" in extending the reach of the ECI into remote corners of the country, and to places where movement by road was a security concern, they said.

The task was time-bound as polling officers had to be positioned at each remote polling station within two days prior to the election date and de-inducted on the day of polling.

From Jammu and Kashmir to Tamil Nadu and Nagaland to Gujarat, the team of ECI spanned the lengths and breadths of the country to literally reach out to every voter in the country.

"This herculean task was achieved through close coordination with the ECI and CEOs of various states through nodal officers in order to optimise utilisation of assets factoring security, weather and road connectivity," the IAF said.

The Hindu (English)
Dated: 13.06.2024

# IAF flew over 1,750 sorties to help EC in conducting LS polls

**The Hindu Bureau**
NEW DELHI

The Indian Air Force (IAF) flew over 1,000 hours in over 1,750 sorties in five of the seven phases of the 2024 Lok Sabha election.

The IAF played a pivotal role in extending the reach of the Election Commission (EC) into remote corners of the country and to places where movement by road was a security concern, it said in a statement on Wednesday.

"During the General Elections-2024, substantial flying effort has taken place over the last few months by the medium lift helicopters [Mi-17 Variants], light utility helicopters [Chetaks] and the indigenously manufactured Advanced Light Helicopters [ALH] Dhruv," it said.

"The task was time bound as polling officers had to be positioned at each remote polling station within two days prior to the election date and de-inducted on the day of polling."

This herculean task was achieved through close coordination with the EC and Chief Electoral Officers of various States through nodal officers to optimise utilisation of assets factoring security, weather, road connectivity, according to the IAF.

"Helicopter assets of the Army and the Border Security Force were also dovetailed into the overall plan towards smooth conduct of general elections-2024."

The transport and helicopter fleets of the IAF undertake various war and peacetime tasks. In addition to the peacetime role of sustaining our troops by air maintenance and airlift of combat troops during exercises, a number of tasks are undertaken in aid of civil authority.

The Hindu (Tamil)
Dated: 13.06.2024

# விக்கிரவாண்டி இடைத்தேர்தல் பயண செலவில் விலக்கு பெற கட்சிகள் விண்ணப்பிக்க அழைப்பு

● சென்னை

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூ நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951, பிரிவு 77–ன்படி, தேர்தல் பிரச்சாரம் செய்யும் அரசியல் கட்சி தலைவர்களின் விமான பயணம் உள்ளிட்ட போக்குவரத்து செலவுகள் வேட்பாளர், முகவர்களின் கணக்கில் சேராது.

தேர்தல் செலவினத்தில் இருந்து விலக்கு பெற விரும்பும் அரசியல் கட்சிகள் தங்கள் கட்சி சார்பில் பிரச்சாரம் செய்பவர்களின் பெயர் பட்டியலை தெரிவித்து விண்ணப்பிக்க வேண்டும்.

அந்த வகையில், அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் 40 பேரின் பெயர் பட்டியலையும், பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்சிகள் 20 பேரின் பெயர் பட்டிய லையும் அனுப்ப வேண்டும். இந்த பட்டியலில் உள்ளவர் களின் பயண செலவுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்படும். இதுதவிர, மற்ற செலவினங்கள் அனைத்தும் வேட்பாளரின் செலவு கணக்கில் சேர்க்கப்படும். அதே நேரம், வேட்பாளருக்கு வேறு கட்சியின் நட்சத்திர தலைவர் பிரச்சாரம் செய்தால், அதில் விலக்கு கோர இயலாது.

விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதிக்கான தேர்தல் அறிவிக்கை வரும் 14–ம் தேதி (நாளை) வெளியிடப்பட உள்ளது. மேற்கண்ட சட்டப் பிரிவு விளக்கம் 2(1)–ன்படி, அறிவிக்கை வெளியிட்டதில் இருந்து 7 நாட்களுக்குள் இப்பட்டியலை சமர்ப்பிக்க வேண்டும் என்பதால், கட்சிகள் ஜூன் 21–ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

CEO, TN Announce that the political parties are invited to apply for exemption on travel expenses for Vikravandi by-elections.

The Hindu (Tamil)

Dated: 13.06.2024

மக்களவை தேர்தல் பணியில்

# 1000 மணி நேரம் பறந்து விமானப் படை சேவை

● புதுடெல்லி

மக்களவை தேர்தல் பணியில் விமானப்படை ஹெலிகாப்டர்கள் 1,750 முறை பயணம் மேற்கொண்டு 1,000 மணி நேரத்துக்கு மேல் பறந்துள்ளன.

இது குறித்து விமானப்படை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மக்களவை தேர்தல் ஏப்ரல் 19-ம் தேதி முதல் ஜூன் 1-ம் தேதி வரை 7 கட்டங்களாக நடைபெற்றது. தேர்தல் பணியில் விமானப்படையின் எம்.ஐ, சேத்தக் மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துருவ் இலக ரக ஹெலிகாப்டர்கள் பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம் ஜம்மு காஷ்மீரில் இருந்து தமிழகம் வரையும், குஜராத்திலிருந்து நாகாலாந்து வரையும் உள்ள தொலைதூர பகுதிகளுக்கும், பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ள பகுதிகளுக்கும் ஓட்டுப் பதிவு இயந்திரங்களையும், தேர்தல் பணியாளர்களையும் விமானப்படை ஹெலிகாப்டர்கள் பாதுகாப்பாக கொண்டு சென்று, தேர்தல் முடிந்ததும் அவர்களை மீண்டும் அழைத்து வந்தன.

மொத்தம் 1,750 முறை விமானப்படை ஹெலிகாப்டர்கள் பயணம் மேற்கொண்டு 1,000 மணி நேரத்துக்கு மேல் பறந்துள்ளன. தேர்தல் ஆணையம் மற்றும் மாநில அதிகாரிகள் ஒத்துழைப்புடன் இந்த மிகப் பெரிய பணி வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது.

## அமைதி பணிகள்

இது தவிர இந்திய ராணுவம் மற்றும் எல்லை பாதுகாப்பு படையின் ஹெலிகாப்டர்களும் தேர்தல் பணிக்கு பயன்படுத்தப் பட்டன. போர் நேரங்களில் மட்டும் அல்லாது அமைதிப் பணிகளிலும் விமானப்படை ஹெலிகாப்டர்கள் முக்கிய பங்காற்றுகின்றன. மக்களுக்கு உதவுவதில் விமானப்படை முன்னணியில் உள்ளது.

இவ்வாறு விமானப்படை தெரிவித்துள்ளது.

News regarding AIR force service for 1000 hours in lok sabha election process.

Daily Thanthi

Dated: 13-06-2024

விருதுநகர் தொகுதியில்

# மறுவாக்கு எண்ணிக்கை கோரி தலைமை தேர்தல் கமிஷனில் விஜயபிரபாகரன் மனு

## 'நடவடிக்கை எடுக்காவிட்டால் கோர்ட்டுக்கு செல்வோம்'

புதுடெல்லி, ஜூன்.13-

நாடாளுமன்ற தேர்தலில் விருதுநகர் தொகுதியில் தி.மு.க. கூட்டணி கட்சியான காங்கிரஸ் சார்பில் மாணிக்கம் தாகூர் எம்.பி.யாக வெற்றி பெற்றார். இந்த நிலையில், வாக்கு எண்ணிக்கையில் முறைகேடு நடந்ததாக 2-ம் இடம் பிடித்த தே.மு.தி.க. வேட்பாளர் விஜயபிரபாகரன், கட்சி பொதுச்செயலாளர் பிரேமலதா ஆகியோர் புகார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் வேட்பாளர் விஜயபிரபாகரன் நேற்று டெல்லிக்கு சென்று தேர்தல் கமிஷனில் நேரில் மனு அளித்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

விருதுநகர் தொகுதியில் வாக்கு எண்ணிக்கையில் குளறுபடி உள்ளதால் மறு வாக்கு எண்ணிக்கை நடத்த வேண்டும் என தகுந்த ஆதாரங்களுடன் தேர்தல் கமிஷனில் மனு அளித்து இருக்கிறோம். அதனை பரிசீலனை செய்து ஒரு வாரத்தில் பதில் சொல்வதாக சொல்லியிருக்கிறார்கள். நிச்சயம் நியாயம் கிடைக்கும் என நம்புகிறோம்.

வாக்குகள் எண்ணப்பட்டபோது 13-வது சுற்றில் இருந்து 19-வது சுற்றுக்கு தாவியுள்ளனர். மதிய உணவு இடைவேளையில் எல்லோரும் வெளியே சென்றிருந்த நேரத்தில் 5 சுற்று வாக்குகளை எண்ணி முடித்து விட்டனர். உணவு இடைவேளை நேரத்தையும் 2 முதல் 3 மணிநேரம் நீட்டித்து விட்டனர். யாரையும் உள்ளே விடவில்லை.

மேலும், தபால் ஓட்டுகளை இரவு வரை வைத்திருந்து எல்லோரையும் வெளியே அனுப்பிவிட்டு திறந்திருக்கிறார்கள். அமைச்சர்களும் அங்கே வந்து சென்றிருக்கிறார்கள். இப்படி பல விஷயங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

இவற்றையெல்லாம் காரணங்களாக எடுத்துக்கொண்டு பரிசீலிப்பதாக தேர்தல் கமிஷன் கூறியிருக்கிறது. என்ன செய்கிறார்கள் என்று பார்க்கலாம். நடவடிக்கை எடுக்காவிட்டால் கண்டிப்பாக கோர்ட்டுக்கு போவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

Thiru. Vijaya prabhakaran petitions CEO,TN for recounting in Virudhunagar Constituency.

Dinamalar
Dated: 13-06-2024

# விருதுநகரில் மறு ஓட்டு எண்ணிக்கை ஆணையத்தில் விஜய பிரபாகரன் மனு

**சென்னை, ஜூன் 13–**

விருதுநகர் தொகுதியில் மறு ஓட்டு எண்ணிக்கை நடத்த வலியுறுத்தி, இந்திய தேர்தல் ஆணையத்தில், தே.மு.தி.க., வேட்பாளர் விஜய பிரபாகரன் மனு அளித்துள்ளார்.

நடந்து முடிந்த லோக்சபா தேர்தலில், அ.தி.மு.க., கூட்டணியில், விருதுநகர் தொகுதியில், தே.மு.தி.க., வேட்பாளராக விஜயகாந்தின் மூத்த மகன் விஜய பிரபாகரன் போட்டியிட்டார். காங்., வேட்பாளர் மாணிக்கம் தாகூரிடம், 4,379 ஓட்டுகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தார்.

ஓட்டு எண்ணிக்கை முறையாக நடத்தப்படவில்லை என, மாவட்ட தேர்தல் நடத்தும் அதிகாரியான கலெக்டர் மீது, தே.மு.தி.க., தரப்பில் குற்றம்சாட்டப்பட்டு உள்ளது. மறு ஓட்டு எண்ணிக்கை நடத்த வலியுறுத்தி, தமிழக தலைமை தேர்தல் அலுவலகத்தில், மனு அளிக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில், டில்லியில் உள்ள தலைமை தேர்தல் ஆணைய அலுவலகத்தில், அதன் செயலரிடம், மறு ஓட்டு எண்ணிக்கை கோரி, விஜய பிரபாகரன் நேற்று மனு அளித்துள்ளார்.



விருதுநகர் லோக்சபா தொகுதியில் மறு ஓட்டு எண்ணிக்கை நடத்தக்கோரி, தே.மு.தி.க., வேட்பாளர் விஜய பிரபாகரன் நேற்று, டில்லியில் உள்ள தலைமை தேர்தல் ஆணையத்தில் மனு கொடுத்தார்.

அப்போது, விஜய பிரபாகரன் கூறியதாவது:

ஓட்டு எண்ணிக்கை முறையாக நடக்கவில்லை. ஓட்டு எண்ணிக்கை, 13வது ரவுண்டில் இருந்து, 19 ரவுண்டுக்கு நேரடியாக நடந்தது. இரண்டு மணி நேரத்திற்கு மேல் உணவு இடைவேளை நீட்டிக்கப்பட்டது. தபால் ஓட்டுகள் இரவில் எண்ணப்பட்டது. அமைச்சர்களும், ஓட்டு எண்ணிக்கை மையத்திற்கு வந்தனர்.

இதுகுறித்த விபரங்களை எடுத்துக் கூறியுள்ளோம். ஒரு வாரத்தில் பதில் அளிப்பதாக தேர்தல் ஆணைய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

நிச்சயம் நியாயம் கிடைக்கும் என நம்புகிறோம். நீதிமன்றத்தை நாடுவதற்கும், தேவையான நடவடிக்கைகளை எடுப்போம்.

எங்கள் கோரிக்கைகளை தேர்தல் நடத்திய அதிகாரி ஏற்காதது, மன அழுத்தத்தை தந்துள்ளது. அந்த வலியின் வெளிப்பாடாகவே, தலைமை தேர்தல் ஆணையத்தில் மனு அளித்துள்ளேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

Thiru. Vijaya prabhakaran petitions CEO, TN for recounting in Virudhunagar constituency.

Dinamalar

Dated: 13-06-2024

# லோக்சபா தேர்தல் பணி விமானப்படை அசத்தல்

புதுடில்லி, ஜூன் 13–

நாட்டின் தொலைதுாரப் பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கு மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்களை எடுத்துச் செல்வது, அதிகாரிகளை அழைத்துச் செல்வது என, லோக்சபா தேர்தலை நடத்துவதற்கு, இந்திய விமானப்படை முக்கிய பங்கு வகித்துள்ளது.

நாடு முழுதும் ஏழு கட்டங்களாக லோக்சபா தேர்தல் நடந்தது. ஏப்., 19ல் துவங்கிய தேர்தல், ஜூன் 1ல் முடிந்தது. லோக்சபா தேர்தலை தங்கு தடையின்றி சுமுகமாக நடத்துவதற்கு, நம் விமானப்படை முக்கிய பங்காற்றி உள்ளது.

இது தொடர்பாக, நம் விமானப்படை நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

லோக்சபா தேர்தலின் போது, விமானப்படையின், எம்.ஐ., 17 வகை நடுத்தர லிப்ட் ஹெலிகாப்டர்கள், 'சேட்டாக்ஸ்' வகை இலகுரக பயன்பாட்டு ஹெலிகாப்டர்கள் மற்றும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மேம்பட்ட இலகுரக 'துருவ்' ஹெலிகாப்டர்கள் வாயிலாக, கடந்த சில மாதங்களாக பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஏழு கட்ட தேர்தலில், ஐந்து கட்டங்களில் விமானப்படை முக்கிய பங்கு வகித்தது. மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்களை விமானத்தில் எடுத்துச் செல்வது, தேர்தல் கமிஷனின் பணியாளர்களை தேர்தல் பணிகளில் ஈடுபடுத்துவது போன்ற பணிகளில் விமானப்படை தீவிரமாக ஈடுபட்டது.

நாட்டின் தொலைதுாரப் பகுதிகளிலும், சாலை வழியாகப் போக்குவரத்து பாதுகாப்பு குறைபாடுள்ள இடங்களிலும், விமானப்படை வாயிலாக தேர்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1,750க்கும் மேற்பட்ட பயணங்களில், 1,000 மணி நேரத்துக்கு அதிகமாக விமானப்படையின் விமானங்கள் பறந்தன. மேலும், ராணுவம் மற்றும் பி.எஸ்.எப்., எனப்படும், எல்லை பாதுகாப்புப் படையின் ஹெலிகாப்டர்களும் தேர்தல் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

News regarding AIR force service in lok sabha election process